**சார்பு நீதிமன்றம், அருப்புக்கோட்டை.**

**O.S.No: 110/2011** **தேதி: 05.02.2026**

**வா.சா. 1 – பாத்திமா பீவி**

**8 ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை :**

நான் எத்தனை வருடங்களாக அருப்புக்கோட்டையில் குடியிருந்து வருகிறேன் என்றால் நான் பிறந்ததில் இருந்தே அருப்புக்கோட்டையில் தான் குடியிருந்து வருகிறேன். வழக்கில் எத்தனை லக்க சொத்துக்களை காட்டியுள்ளேன் என்றால் 16 லக்க சொத்துக்களை காட்டியுள்ளேன். நான் எந்த சொத்துக்களுக்கும் புல எண் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். 16 லக்க சொத்துக்களுக்கும் நான்கு மால் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். தாவா சொத்துக்களுக்கு விஸ்தீரணம் எவ்வளவு என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். தாவா சொத்துக்களுக்கு புல எண், நான்குமால், விஸ்தீரணம் குறிப்பிட்டு காட்டாததால் வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

8 ம் பிரதிவாதி சிக்கந்தர்பாதுஷா 2011 வருடம் இப்ராம் அலி மனைவி பரிதா பீவி விடம் இருந்து சொத்துக்களை வாங்கிய விபரம் தெரியுமா என்றால் வழக்கு தாக்கல் செய்யும் போது எனக்கு தெரியாது. சிக்கந்தர்பாதுஷா கிரையம் வாங்கிய பின்னர் அவர் சொத்தை கிரையம் வாங்கிவிட்டேன் என்று என்னை நேரடியாக பார்த்து சொத்துக்களில் இருந்து காலி செய்ய சொன்னார் என்றால் சரியல்ல. வழக்கு தாக்கல் செய்த பின்னர் 1 வருடம் கழித்து காலி செய்ய சொன்னார். வா.சா.ஆ 18 ல் ம.சா.ஆ 2 வது ஆவணமாக 8 ம் பிரதிவாதி என்னை காலி செய்ய சொல்லி அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பினை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். ஆகையால் 8 ம் பிரதிவாதி சொத்துக்களை காலி செய்ய சொன்னது மேற்படி அறிவிப்பு மூலம் தெரிந்து கொண்டேன்

என்றால் சரிதான். 22.08.2012 ல் 8 ம் பிரதிவாதி இடத்தை காலி செய்ய சொல்லி பிரச்சனை செய்ததாக நான் நகர் காவல்நிலையத்தில் புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். அன்றைய தேதியில் 8 ம் பிரதிவாதி இடத்தை காலி செய்ய சொன்னார் என்ற விபரத்தை புரிந்து கொண்டேன் என்றால் சரிதான். நான் அருப்புக்கோட்டை வாடகை கட்டுபாட்டு நீதிமன்றத்தில் RCOP 9/2012 என்ற வழக்கினை சிக்கந்தர்பாதுஷா என் மீது தாக்கல் செய்திருந்தார் என்றால் சரிதான். அந்த வழக்கில் நான் 12.04.2013 ம் தேதி எனது தரப்பில் மறுப்புரை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான்.

நான் மேற்படி மறுப்புரையில் இவ்வழக்கு நடந்து வரும் விபரத்தையும், குற்ற எண் 711/2012 விபரத்தையும் குறிப்பிட்டு கூறியுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி வாடகை கட்டுப்பாட்டு நீதிமன்றத்தில் இவ்வழக்கில் முடிவின் அடிப்படையில் தீர்வு காணலாம் என்று மனு தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரிதான். நான் குடியிருக்கும் வீட்டிற்கு தெற்கே சலாமத் பீவி முன்பு குடியிருந்தார் என்றால் சரிதான். நான் குடியிருக்கும் வீட்டிற்கு வடக்கே காதர் பீவி முன்பு குடியிருந்தார் என்றால் சரிதான். சிக்கந்தர்பாதுஷா மேற்படி சலாமத் பீவி மற்றும் காதர்பீவி மீது வாடகை கட்டுப்பாட்டு நீதிமன்றத்தில் RCOP 7/2012, RCOP 8/2012 ஆகிய வழக்குகளை தாக்கல் செய்திருந்தார் என்றால் சரிதான். மேற்படி RCOP 7/2012, RCOP 8/2012 அனுமதிக்கப்பட்டு வீட்டில் இருந்து வெளியேற்றுவதற்கு உத்தரவாகி இருந்தது என்றால் சரிதான். 1 முதல் 15 லக்க சொத்துக்கள் ரசாக் காம்பவுண்டில் உள்ள வீடுகள் கிழக்கு பார்த்து சில வீடுகளும், மேற்கு பார்த்து சில வீடுகளும் உள்ளது என்றால் சரிதான். மேற்கு பார்த்து உள்ள வீடுகளில் முதல் 4 வீடுகள் மட்டும் 8 ம் பிரதிவாதி கிரையம் வாங்கியிருந்தார் என்றால் வாங்கியிருப்பதாக சொல்கிறார்கள் எனக்கு உறுதியாக தெரியாது. எனது பிராதில் என் கட்சி படி வா.சா.ஆ 14 ல் இப்ராம் அலிக்கு, அப்துல்ரசாக் எழுதி வைத்த ஆவணத்தை நான் மறுக்கிறேன் என்றால் சரிதான்.

நான் தாக்கல் செய்துள்ள 8 முதல் 19 ஆவணங்கள் அருப்புக்கோட்டை கட்டுப்பாட்டு நீதிமன்றத்தில் உள்ள RCOP 9/2012 என்ற வழக்கில் இருந்து பெறப்பட்டது என்றால் சரிதான். 1 முதல் 6 ஆவணம் 17.11.2025 அன்று குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றும், 7 முதல் 29 ஆவணங்கள் 27.11.2025 அன்று குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். 8 ம் பிரதிவாதி என் மீது தாக்கல் செய்த வாடகை கட்டுப்பாட்டு மனுவில் சொத்தின் விபரங்களை சரியாக குறிப்பிட்டு தான் தாக்கல் செய்திருந்தார் என்றால் சரிதான். வா.சா.ஆ 19 ஆவணத்தில் சொத்து விபரங்கள் சரியாக தான் குறிப்பிடப்பட்டுள்ளது. 8 ம் பிரதிவாதி சொத்துக்களை கிரையம் வாங்கிய விபரம் 2011 ல் தெரியுமா என்றால் வழக்கு தாக்கல் செய்த பின்னர் 2012 ல் தான் தெரியும். 8 ம் பிரதிவாதி வாடகை கட்டுப்பாட்டு அதிகாரியிடம் தாக்கல் செய்த மனுவில் நான் ஆஜரான பின்பு அதில் உள்ள ஆவணங்களை நான் பார்த்தேனா என்றால் வில்லங்கம் எடுத்து பார்த்து அதன் பின்னர் ஆட்சேபணை தாக்கல் செய்தேன். வா.சா.ஆ 14 ஆவணம் அப்துல்ரசாக், இப்ராம் அலிக்கு எழுதிக்கொடுத்த தான பத்திரத்தில் கண்ட சாட்சிகள் மைதீன் பாவா, ஜாபர் அலி இறந்து போனதாக ஏற்கனவே சாட்சியம் அளித்துள்ளேன். மேற்படி சாட்சிகள் எப்போது இறந்தார்கள் என்றால் இந்த வழக்கு தாக்கல் செய்த பின்னர் இறந்தார்.

இவ்வழக்கிற்கு பின்னர் வா.சா.ஆ 14 பற்றிய விபரத்தை சாட்சிகள் மற்றும் பத்திரத்தை எழுதிய செல்வராஜ், தட்டச்சு செய்த ஜோதிமணி ஆகியோரிடம் பத்திரம் எழுதப்பட்டது பற்றி சென்று கேட்டேனா என்றால் மோசடியான பத்திரம் என்பதால் யாரிடம் கேட்கவில்லை. வா.சா.ஆ 14 பத்திரத்தில் பக்கம் 7 ல் அப்துல்ரசாக் இடது கட்டை விரல் கைரேகை வைக்கப்பட்டதாக கண்டுள்ளது என்றும் அதற்கு கீழே ஜாபர் அலி, மைதீன் பாவா இன்னார் என்று நிருபித்தவர்கள் என்று கண்டுள்ளது என்றால் அது மோசடியானது. அதே போல் பக்கம் 7 ல் அருப்புக்கோட்டை சார்பதிவாளர் அலுவலக முத்திரை பொறிக்கப்பட்டுள்ளது என்றால் நான் வழக்கு போட்டபின்னர் மேற்படி ஆவணம்

உருவாக்கப்பட்டுள்ளது. வா.சா.ஆ 14 ஆவணத்தை வாடகை கட்டுப்பாட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய சான்றிட்ட நகல் 2012 ல் அருப்புக்கோட்டை சார்பதிவாளர் அலுவலகத்தில் மனு செய்தேன் என்றால் சரிதான். ஜாபர் அலி, மைதீன் பாவா குடும்பத்தினர் அருப்புக்கோட்டையில் உள்ளார்கள் என்றால் சரிதான். அவர்களது குடும்பத்தார்களை எனக்கு தெரியும். மேற்படி குடும்பத்தாரிடம் ஜாபர் அலி மற்றும் மைதீன் பாவா கையெழுத்து பற்றி விசாரித்தால் தெரிய வரும் என்றால் சரிதான். வா.சா.ஆ 14 ல் கண்டுள்ள அப்துல்ரசாக்கின் கையெழுத்து மற்றும் கைரேகை பொய்யானது என்று நிருபணம் செய்ய நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை என்று சொன்னால் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்ததால் நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை.

8ம் பிரதிவாதி வாடகை கட்டுப்பாட்டு நீதிமன்றத்தில் தன் பெயரில் வீட்டு வரியை மாற்றுவதற்கும், புது வீடு கட்டுவதற்கு கட்டிட வரைபட அனுமதி வாங்கிய ஆவணங்களை அந்த வழக்கில் தாக்கல் செய்த விபரம் எனக்கு தெரியும். இந்த வழக்கில் 7, 8 பிரதிவாதிகளை தரப்பினராக சேர்ப்பதற்கு முன்பே வா.சா.ஆ 8 முதல் 26 வரையான ஆவணம் பற்றிய விபரம் எனக்கு தெரியும். வா.சா.ஆ 4 ன் மூலமாக வா.சா.ஆ 14 ஆவணம் பற்றி 26.06.2011–லே தெரிந்து கொண்டேன் என்றால் சரிதான். வா.சா.ஆ 14 ஆவணம் சம்பந்தமாக பிராது பக்கம் 5 லிலும், நிருபண வாக்குமூலம் பக்கம் 2 லிலும் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். அப்துல்ரசாக் யிடம் செட்டில்மெண்ட் ஆவணம் எழுதி வைத்தது சம்பந்தமாக ஆட்சேபணை எதுவும் தெரிவித்தேனா என்றால் அவர் எழுதி வைத்ததே தெரியாது. வாடகை கட்டுப்பாட்டு நீதிமன்றத்தில் 8ம் பிரதிவாதி கிரையம் வாங்கிய சம்பந்தமாக இப்ராம் அலி மனைவி பரிதா சாட்சியம் அளித்தார் என்றால் சரிதான். அதற்கு பின்னர் பரிதாவை இந்த வழக்கில் தரப்பினராக சேர்ந்தேன் என்றால் சரிதான். வா.சா.ஆ 14 ஆவணம் எழுதப்பட்ட விபரம் எனக்கு 2011–லே தெரியும் என்றும், நான் வழக்கிற்காக தெரியாது என்று

பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. இப்ராம் அலி தனது மனைவி பரிதாவிற்கு 01.07.2008 மூலம் ஒரு செட்டில்மெண்ட் ஆவணம் எழுதி வைத்தார் என்றால் நான் தாக்கல் செய்த பின்னர் தான் அது பற்றி தெரியும். மேற்படி ஆவணத்தின் அடிப்படையில் வா.சா.ஆ 16 கிரைய ஆவணம் எழுதிக்கொடுக்கப்பட்டது என்றால் எல்லாமே வழக்கு தாக்கல் செய்த பின்னர் தான் தெரியும். எனது பிராதிலோ, நிருபண வாக்குமூலத்திலோ எந்த எந்த சொத்துக்களை 6 ம் பிரதிவாதி, 7 ம் பிரதிவாதிக்கு பவர் கொடுத்து அதன் அடிப்படையில் 8 ம் பிரதிவாதிக்கு கிரையம் செய்து கொடுத்தார் என்ற விபரத்தை குறிப்பிட்டு கூறியுள்ளேனா என்றால் குறிப்பிட்டு சொல்லவில்லை.

வா.சா.ஆ 14 ஆவணம் சார்பதிவாளர் அலுவலகத்தில் முறையாக நிறைவேற்றப்பட்ட ஆவணம் என்றும், அதன் அடிப்படையில் ஏற்பட்ட வா.சா.ஆ 15, வா.சா.ஆ 16 ஆவணங்கள் மற்றும் 7 ம் பிரதிவாதியின் பெயரில் உள்ள பவர் பத்திரம் சட்டப்படி சரியான ஆவணங்கள் என்று சொன்னால் சரியல்ல. நான் உரிய சட்டப்படியான காலத்திற்குள் 7, 8 பிரதிவாதிகள் மீது வழக்கு தாக்கல் செய்யாததால் இந்த வழக்கு நிலைநிறுத்தக்கதல்ல என்றால் சரியல்ல. 4, 5 பிரதிவாதிகள் இவ்வழக்கிற்கு அவசியமற்ற தரப்பினர்கள் என்றால் வாரிசு அடிப்படையில் நான் அவர்கள் மீது இவ்வழக்கினை தாக்கல் செய்துள்ளேன். நான் எந்தவித உண்மையான சங்கதிகளை கூறாமலும், உரிய ஆவணங்களை தாக்கல் செய்யாமலும் பிரதிவாதிகளை அலைகழிக்க வேண்டும் என்பதற்காகவும், தாவா சொத்தில் இருந்து வெளியேறாமல் இருப்பதற்காகவும் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. RCOP 9/2012 மீது இந்நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்யப்பட்டுள்ளது என்றும், அதில் நான் எதிர்மனுதாரராக உள்ளேன் என்றும் சொன்னால் சரிதான். 7, 8 பிரதிவாதிகளுக்கு எதிராக எந்தவிதமான பரிகாரமும் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. 8 ம் பிரதிவாதி கிரையம் பெற்ற 4 வீடுகளும் 100 ஆண்டுகள் பழமையானவை என்றால் சரிதான். மேலும் அது சேதம் அடைந்தது என்று சொன்னால் சரியல்ல.

சிக்கந்தர்பாதுஷா இடிக்க வந்ததால் சேதம் அடைந்தது. சிக்கந்தர்பாதுஷா இடிக்கவில்லை என்றும் நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. வாடகை கட்டுப்பாட்டு நீதிமன்றத்தில் மேற்படி வீட்டில் மின்சாரம் இல்லாததால் இரவில் அந்த வீட்டிற்கு செல்வதில்லை என்றும், பகலில் மட்டும் தான் செல்வதாக சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரிதான். வா.சா.ஆ 18 ஆவணத்தில் பக்கம் 17ல் வரி 8ல் எ.ம.சா.ஆ 1 குறுக்கு விசாரணை சாட்சியத்தில் இருந்து எதிர்மனுதாரர் மனு கட்டிடத்தில் குடியிருக்கவில்லை என்றும், மனு கட்டிடம் மிகவும் பழமையானது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் பிரதிவாதி மீது பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றும், நான் கோரிய பரிகாரம் எதுவும் எனக்கு கிடைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல.

என்னால் திறந்த நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

சார்பு நீதிபதி,
அருப்புக்கோட்டை.